மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிட நலத்துறையின் சார்பாக உண்டு உறைவிடப்பள்ளியை ஏற்படுத்தினால் ஆதிவாசி மாணவர்களுக்கு இலவச உணவு கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அதிக மாணவர்கள் படிக்க வருவார்கள். எனவே ஊராட்சி ஒன்றியப் பள்ளியை ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் உண்டு உறைவிடப்பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கல்வித்துறையால் நடத்தப்படும் பள்ளி மாணவர்களுக்கும் அளிக்கப்படுவதால் ஏற்கனவே நடைபெற்றுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை ஆதிதிராவிட நலப்பள்ளியாக மாற்றத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியபக்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை, இரு முறைகூட வருவது கிடையாது. உண்டு உறைவிடப்பள்ளியாக இருந்தால் ஆசிரியர்கள் அங்கே இருந்து பள்ளி மாணவர்கள் படிப்பில் அதிகக் கவனம் செலுத்த முடியும், எனவே, அரசு இதைப் பரிசீலித்து, உண்டு உறைவிடப் பள்ளியாக மாற்ற முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு மனுச் செய்தால் தனியாக, ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக பள்ளி திறக்கப்படும். ஆனால் கல்வித் துறையின் மூலமாக இயங்கும் பள்ளியை ஆதிதிராவிடத் துறையால் மாற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

339—

பூம்புகார் தொகுதியில் மீன் பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்தல்

*15203 **திரு. எம். பூராசாமி:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடல் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, மீனவர்களை அதிகமாகக் கொண்டது. மீன்கள் அங்கே அதிகமாகக் கிடைக்கின்றன. பூம்புகார் தொகுதியில் மீன்களைப் பதப்படுத்தினால் அந்நியச் செலாவணி கிட்டும். மீனவர்களுக்கும் உபயோகமாக இருக்கும். ஆகவே, கருணை மிகுந்த மாண்புமிகு இதய தெய்வத்தின் அரசு இதைப் பரிசீலனை செய்து மீன் பதப்படுத்தும் நிலையங்களை அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தொகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் தனியாரால் வாங்கப்பட்டு, அவர்களால் விற்பனைக்கு ஊர்திகளில் பிற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அத்தோடு, கடந்த 1979-ஆம் ஆண்டு இந்தத்துறையின் கீழ் இயங்குகின்ற பனிப்பொறி நிலையங்கள் மற்றும் குளிர்பதன அறைகள் குறித்து ஆய்வு செய்யும்போது, எதிர்காலத்திலே இத்துறையில் எந்தவொரு நிலையமும் திறக்கப்படக்கூடாது என்ற ஒரு முடிவை எடுத்திருந்தது. அந்த அடிப்படையிலே பனிப்பொறி நிலையங்கள் திறக்கப்படவில்லை. எனவே, அங்கே அரசின் சார்பாக ஒரு புதிய பனிப்பொறி நிலையம் மற்றும் குளிர்பதன அறைகள் திறக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 340, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

340—

தமிழ்நாட்டில் பனைவாரியம் அமைத்தல்

* 12557 **திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பனைவாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்